## மத்திய கலாசார நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை – 2021, 2022 மற்றும் 2023

---

மத்திய கலாசார நிதியத்தின் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதுகின்ற 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் நிதியத்தின் செயற்படு நிலை தொடர்பான எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றது.

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமானம் 877(2)(ஈ) பிரமானத்தின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் நிர்வாக சபைக்கு சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் 212.02.01 இன் பிரகாரம் 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்காக முழுமையான கணக்காய்வு மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விசேட கணக்காய்வு மேற்கொண்டு அறிக்கை ஒன்று 2022.03.14 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இந்த விடயங்களின் காரணமாக 2020, 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பித்தல் தாமதம் அடைந்திருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2 கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்ளுப்பிட்டி இலங்கை வங்கியில் காணப்படுகின்ற ரூபா 405,355,795 ஆன நிலையான வைப்பின் பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிலையான வைப்புச் சான்றதழ் அல்லது வங்கி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்த மிதிகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | நிலையான வைப்புச் சான்றிதழ்களின் பிரதிகள் தற்போது கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வங்கியினால் அனுப்பப்பட்ட வங்கி உறுதிப்படுத்தல்களில் காணப்படுகின்ற வழுக்களின் காரணமாக இந்த 03 நிலையான வைப்புக்களுக்குரிய தகவல்கள் சரியான பிரகாரம் காண்பிக்கப்படவில்லை. அந்த வங்கிக்கு அறிவித்து சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மீதி உறுதிப்படுத்தல் அல்லது நிலையான வைப்புச் சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 110(1) | வாகன விபத்தினால் ஏற்படுகின்ற நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 110(1) இன் பிரகாரம் இழப்புப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | இழப்புப் பதிவேடு ஒன்று பேணிச் செல்வதற்கு உரிய பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது . | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 316 | காசு, முத்திரை, நுழைவுச்சீட்டுக்கள் போன்ற நிதி ரீதியான பெறுமதியான விடயங்கள் அதற்காக விசேட வழங்கல்கள் உள்ள பாதுகாப்பு கூடம், காப்பகம், பாதுகாப்பு அறை அல்லது ஏனைய பாதுகாக்கப்பட்ட நிலையங்கள் பாதுகாப்பாக வைக்க வேண்டியிருந்த போதிலும் அச்சிடல் நடவடிக்கைகளின் | பிரதான அலுவலகத்தின் பாதுகாப்பு இடம் ஒன்றில் நுழைவுச் சீட்டுக்கள் களஞ்சியப் படுத்தப்பட்டு பாதுகாப்பாக பேணிச் செல்லும் வகையில் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இறுதியில் தற்காலிகமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கின்ற அச்சிடல் நுழைவுச் சீட்டுக்கள் மற்றும் நிதியத்தின் பிரதான களஞ்சியத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள அச்சிடப்பட்ட நுழைவுச் சீட்டுக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | நிதிப்பிரமாணம் 835(2) (இ) | நிதியத்திற்காக உடன் படிக்கை செய்யப்பட்ட தொகையான ரூபா 28,800,000 பெறுமதியான 02 கட்டிடங்கள் வாடகைக்கு எடுக்கும் போது கட்டிடங்களின் மாதாந்த வாடகைப் பெறுமதி தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளரிடம் வினவி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வாடகைக்குப் பெறும் போது மாதாந்த வாடகைப் பெறுமதி தொடர்பாக பிரதான மதிப்பீட்டாளரிடம் வினவி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 1647(ஆ) | நிதியத்திற்குச் சொந்தமான 162 வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்க வில்லை. | அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பணிப்பாளர் (நிர்வாகம்) இற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | நிதியத்திற்குச் சொந்தமான 162 வாகனங்களில் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | முறையான பிரகாரம் எரிபொருள் எரிவைப் பரீட்சிக்கும் வகையில் வாகனத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2021 யூலை 05 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற உள்ள கட்டுப்பாட்டு சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | ஒவ்வொரு வாகனம் தொடர்பாகவும் இடம்பெறுகின்ற செலவினங்களை உள்ளடக்கி கணக்கு ஒன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஒவ்வொரு வாகனம் தொடர்பாகவும் ஏற்படுகின்ற செலவினங்களை உள்ளடக்கி கணக்கு ஒன்றைப் பேணிச் செல்வதற்கு போக்குவரத்து உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது . | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023.11.17 ஆந் திகதி நடைபெற்ற 217 ஆவது நிர்வாக சபைக் கூட்டத்தின் போது நிலையான வைப்பை மீள் முதலீடு செய்தல் மற்றும் முதலீடு செய்வதற்காக நிர்வாக சபைக்குச் சொந்தமான அதிகாரங்கள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (வரிசை அமைச்சின் செயலாளர்) இற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தீர்மானத்திற்கு முரணாக பணிப்பாளர் நாயத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | 217.04.20 என்ற நிர்வாக சபைப் பத்திரத்தின் பிரகாரம் நிலையான வைப்புக்களை மீள் முதலீடு செய்வதற்காக நிர்வாக சபைக்கு சொந்தமான அதிகாரங்கள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (வரிசை அமைச்சின் செயலாளர்) இற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | நிர்வாக சபை அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் 2023 நவம்பர் 30 வரை மாதாந்த வாடகை ரூபா 1,200,000 வீதம் கொடுப்பனவு அடிப்படையில் கொழும்பு 05 பிரதேசத்தில் பெறப்பட்ட கட்டிடத்தில் 02 மாடிகள் (ஒன்று சதுர அடி 5618.31 வீதம் ஆன) 2021 திசெம்பர் 01 ஆம் திகதி முதல் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த போதிலும் நிதியத்தால் வாடகைக்கு எடுக்கப்பட்ட 02 ஆவது மாடியை பயன்படுத்துதல் 2022 பெப்ரவரி 14 ஆந் திகதியே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் | மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு உரிய கொழும்பு 05 பிரதேசத்தில் பெறப்பட்ட இரண்டாவது மாடி (சதுர அடி 5618.31) 2021 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் 2022 பெப்ரவரி 14 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்காமைக்கான காரணமாக அந்த மாடி மத்திய கலாசார நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேவைகளுக்காக பொருத்தமான வகையில் (அலுவலக வசதிகள்) இன் | கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் போது நிதியத்திற்கு பாதகம் அல்லாத வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் 03 மாதங்களுக்கு அண்ணளவான காலம் அந்த மாடிக்கு உரிய ரூபா 600,000 வீதம் ரூபா 1,500,000 பயனற்ற வகையில் செலுத்தப்பட்டிருந்தது. | பிரகாரம் தயாரிப்பதற்கு காலம் எடுத்திருந்தது. | |
| (ஆ) | நிதியத்திற்காக பதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்படும் வரை நிதியத்தின் பிரதான அலுவலகம் வாடகை அடிப்படையில் பல்வேறு தரப்பினர்களுக்கு உரிய கட்டங்களில் நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும் புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்காமையின் காரணமாக 2017 மார்ச் மாதம் முதல் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கட்டிட வாடகையாக ரூபா 82,382,757 செலுத்தியமை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | மத்திய கலாசார நிதியத்தின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள 212/1, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07 நிலம் கையளிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் நிர்மாண நடவடிக்கைகளுக்காக நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது. | நிதியத்திற்காக புதிய கட்டிட் ஒன்றை விரைவாக நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டில் நிதியத்தின் விரிவுபடுத்தலில் தொல்பொருளியல் ஆராய்ச்சி, அகழ்வு நடவடிக்கைகள், பாதுகாத்தல் நடவடிக்கைகள், நூதன கூடங்கள் மற்றும் தொல்பொருளியல் இடங்களை பராமரிப்பதற்காக ஆரம்பமாக ரூபா 727,669,273 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது அது ரூபா 605,039,238 வரை குறைத்துத் திருத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டில் உள்ள பிரகாரம் வேலைப் பெறுமதி ரூபா 328,669,350 ஆக இருந்ததுடன் அதன் செயல்முன்னேற்றம் ஆரம்ப மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்யும் போது 45 சதவீதம் மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடு செய்யும் போது 54 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. இதன் பிரகாரம் மதிப்பீடு தயாரித்தல் தர்க்க | 2023 ஆம் ஆண்டில் பதவியணியினர் மற்றும் தொழிலாளர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நிதி நெருக்கடியின் காரணமாக ஆட்சேர்த்தல் நடவடிக்கைகள் கைவிடப்பட்டமையால் உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே நிறுவனத்தில் இருக்கின்ற கடமை கையளித்தல் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட தொழிலாளர் பதவியணியில் சேவைக் காலத்தை நீடித்தலும் கைவிடப்பட்டிருந்தது. அது இந்த வேலைத் தளங்களின் செயல் முன்னேற்றத்திற்காக நேரடியாகத் தாக்கமளித்திருந்தது. அதனால் இலக்கிடப்பட்ட செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு | பொருத்தமான மற்றும் சரியான மதிப்பீடை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என பிரச்சனை உடனாக இருந்தது. | முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 222,952,508 இனாலும் ரூபா 122,630,035 இனாலும் குறைக்கப்பட்டு ஆரம்ப மதிப்பீடு திருத்தப்பட்டிருந்ததுடன் எந்த ஒரு வேலைத்தளத்திலும் வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய அகழ்வுகள், பாதுகாத்தல், பராமரிப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளைத் தீர்மானித்தல், அதற்குரிய மதிப்பீடுகளை சமர்ப்பித்தல் மற்றும் அவற்றின் பௌதீக செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல், தகைமை பெற்ற பொறியியலாளர் அல்லது அவ்வாறான பதவி நிலை அங்கீகாரத்துடன் மற்றும் மேற்பார்வையுடன் மேற்கொள்ள வேண்டியிருந்தமை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட மதிப்பீடு பணிப்பாளர் அபிவிருத்தியினால் பரிந்துரை செய்யப்பட்டு பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட்டு நிர்வாக சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இதற்காக உரிய இணைப்புக்கள் கணக்காய்விற்கு அனுப்பட்டுள்ளது. | மதிப்பீடு தயாரித்தல் மற்றும் அவற்றின் பௌதீக செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக தகைமை பெற்றவர்களின் சேவையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதிய சட்டத்தின் 3(2) பிரிவின் பிரகாரம் நிதியம் தொடர்பான நிர்வாக சபையின் தலைவராக பிரதமரிடம் இருந்தும், அந்தந்த விடயப் பொறுப்பு அமைச்சரையும் உள்ளடக்கிய நிர்வாக சபை ஒன்று இருக் வேண்டியதன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளுக்காக அந்த நிர்வாக சபைக் கூட்டத்தைக் கூட்டுதல் முடியாதிருந்தமையும் நிதிய சட்டம் 44 வருடங்கள் பழைமை அடைந்தமை மற்றும் தற்போதுக்கு பொருந்தும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாது இருந்தமையும் பிரச்சனைகள் உடனாக இருந்தது. | தற்போது நிதியத்தில் காணப்படுகின்ற சட்டத்தை திருத்துவதற்கு குழு ஒன்று நியமித்து திருத்தப்பட்ட வரைவு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அமைச்சினால் திருத்தப்பட்ட வரைவு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சரவையின் மூலம் புதிய சட்டம் ஒன்று தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது புதிய நிர்வாக சபை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் இந்த நிர்வாக சபையில் அங்கீகாரத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்ட திருத்தங்கள் கால ரீதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதிய சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியித்தின் நிர்வாக முகாமைத்துவம் மற்றும் நிர்வாக கட்டுப்பாட்டுச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கட்டுப்பாட்டு சபை கடந்த 03 ஆண்டுகளில் நடாத்தியிருந்த கூட்டங்களின் எண்ணிக்கை 06 ஆகும். ஆதன் பிரகாரம் வருடத்திற்கு 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டமை நிதியத்தின் நோக்கங்களை வினைத்திறனாகவும், செயற்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு இடையூறாக இருந்தது. | நிர்வாக சபைக் கூட்டத்திற்காக நிதியத்தால் கடந்த 03 வருடங்களில் கோரப்பட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் உரிய தினங்களில் நிர்வாக சபைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முடியாது இருந்தது. | நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நிர்வாக சபைக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2011 பெப்ரவரி 02 ஆந் திகதிய இலக்கம் அமப/11/0/169/555/004 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிதியம் உழைத்த வருமானத்தில் 25 சதவீதம் தொல்பொருளியல் நிலையங்களை நடாத்திச் செல்வதற்காக தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சிற்கு வழங்க வேண்டியிருந்த போதிலும் 2019, 2020, 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக வழங்க வேண்டிய முறையே ரூபா 173,782,870 தொகை, ரூபா 66,961,268 தொகை, ரூபா 47,298,263 தொகை, ரூபா 381,601,938 தொகை, ரூபா 989,828,887 மற்றும் ரூபா 997,403,144 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,656,876,370 அந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதியம் அதிக செலவினக் கட்டுப்பாடடை மேற்கொண்டு பேணிச் செல்கின்றது. அதன் காரணமாக இந்த ஆண்டுகளில் தொல்பொருளியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் 25 சதவீத பங்களிப்புத் தொகை வழங்குவதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் நிதியினை வழங்குதல் தொடர்பான திட்டங்கள் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ஸ்ரீ தலதா மாளிகைக்கு அருகில் அமைந்துள்ள நிதியத்திற்குரிய சர்வதேச தகவல் நிலையக் கட்டிடம் சனாதிபதியின் சிரேஸ்ட செயலாளரின் இலக்கம் PS/DSP/RAU/01/10/KP ஆம் இலக்க 2017 யூலை 14 ஆம் திகதிய கோரிக்கையின் படி | 2018 ஆம் ஆண்டு முதல் பல சந்தர்ப்பங்களின் போது கண்டி செயற்திட்ட முகாமையாளரினால் இந்தக் கட்டிடம் மீண்டும் கையேற்றல் தொடர்பாக பஸ்நாயக்க நிலமேயிற்கு அறிவிக்கப்பட்டதுடன் பணிப்பாளர் நாயகத்தினாலும் பஸ்நாயக்க நிலமைக்கு | நிதியத்திற்குச் சொந்தமான ஆதனங்களை உரிய பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2017 யூலை 23 முதல் 2017 ஆகஸ்ட் 16 வரையான காலத்திற்காக கண்டி ஸ்ரீ பத்தினி ஆலயத்தின் தேவைக்காக கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கட்டிடத்தை மீள நம்பிக்கைப் பொறுப்பிற்கு இதுவரை கையேற்கப்படாமையின் காரணமாக இந்த கட்டிடத்தில் அமைந்துள்ள தகவல் நிலையத்தில் இருந்து வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளுக்கு இலவசமான தகவல்களை வழங்குதல், இலவசமாக செவிப்புல கட்புல நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், கலாசாரம் மற்றும் பிணைக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் ஞாபகார்த்த விற்பனைகள், இலங்கைக்கே உரிய கலாசாரம் மற்றும் பிணைக்கப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் போன்ற சேவைகள் 4½ வருட அளவிலான காலமாக வழங்குவதற்கு முடியாதிருந்தது. மேலும் உரிய கட்டிடத்தில் காணப்படுகின்ற ரூபா 05 மில்லியனுக்கு மேற்பட்டிருந்ததாக காண்பிக்கப்படுகின்ற நிதியத்தின் சொத்துக்களும் விளைவற்று மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(எ) காலி கொடவாய கிலுணு தெவமய கப்பலில் தொல்பொருளியல் அறிக்கையிடல் மற்றும் தொல்பொருளியல் பாதுகாப்பு முன்மொழிவு திட்டத்தை அமுல்படுத்துவதற்காக அமெரிக் டொலர் 109,992 கிரய மதிப்பீடு ஒன்று செய்யப்பட்டிருந்ததுடன் அதில் அமெரிக்க டொலர் 82,192 தொகை அமெரிக்க தூதுவர் அலுவலகத்தின் மூலம் பெற்றுக் கொள்வதற்கும் மிகுதித் தொகையான அமெரிக்க

அறிவித்து கடிதம் அனுப்பட்டுள்ளது. கண்டி செயற் திட்டம் மூலம் கண்டி பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்தினாலும் பஸ்நாயக்க நிலமைக்கும் 2024.12.29 ஆம் திகதி பணிப்பாளரினால் இது தொடர்பாக செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| | டொலர் 27,800 தொகை மத்திய கலாசார நிதியத்தின் பங்களிப்புச் செய்வதற்கும் இணக்கம் காணப்பட்டது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அமெரிக்க டொலர் 28,754 செயற்திட்டத்திற்குக் கிடைத்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 1994 ஏப்ரல் மாதம் 20 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 30/94 இன் 5.4 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு உதவி பணம் திறைசேரி பிரதி செயலாளரின் கணக்கில் செலவு வைத்தல் வேண்டும். எனினும் 2023 நவம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் TO/GR/01/1/1/10/ 971 என்ற திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட மாணியம் இலங்கைக்கு பெற்றுக் கொள்ளும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய தொழில்நுட்ப வழுக்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு இந்த மானியத்தைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக மாத்திரம் ஆன வகையில் அந்த தொகை நேரடியாக மத்திய கலாசார நிதியத்தின் உத்தியோக பூர்வ வங்கிக் கணக்கான இலங்கை வங்கிக்கு பெற்றுக் கொள்வதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் நிதியத்தின் உத்தியோக பூர்வ வங்கிக் கணக்கு அல்லாத மக்கள் வங்கியின் இலக்கம் 204302170015194 என்ற கணக்கில் இந்த பணத்தை பெற்றுக் கொள்ளவதற்கு நிதியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | காலி கொடவாய கிலுணு கப்பலில் தொல்பொருளியல் அறிக்கையிடல் மற்றும் தொல்பொருளியல் பாதுகாப்பு முன்மொழிவு திட்டத்தை அமுல்படுத்துவதற்கான வெளிநாட்டு நிதியத்தின் தொழில் நுட்ப வழுவின் அடிப்படையில் பொதுத் திறைசேரியின் கணக்கிற்கு மாற்றுவதற்கு முடியாதிருந்தமையால் பொதுத் திறைசேரியில் வாய்மூல அங்கீகாரத்தின் அடிப்படையில் மத்திய கலாசார நிதியத்தின் மக்கள் வங்கி டொலர் கணக்கில் நேரடியாப் பணம் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் மத்திய கலாசார நிதியத்தால் மீண்டும் அந்தப்பணம் திறைசேரிப் பிரதி செயலாளரின் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். | திறைசேரியினால் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளை பின்பற்றுவதை கவனத்தில் கொள்ளல் வேண்டும். |
| (ii) | 2019 திசெம்பர் 19 ஆந் திகதி இலக்கம் ps/sp/sb/circular/06/1 | நிர்வாக சபை பத்திர இலக்கம் 217.03.02 இன் மூலம் உரிய | சுற்றறிக்கையின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | என்ற சனாபதி அலுவலக சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் போது அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் தொடர்ந்தும் எந்த ஒரு கடப்பாடும் ஏற்படுத்துதல் அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடாதிருந்த போதிலும் மத்திய கலாசார நிதியத்தால் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | அமெரிக்க தூதுவர் நிதியத்தின் கையளித்தல் கடிதத்தின் படி செயலாற்றல் காலப்பகுதி 2022 செப்தெம்பர் 30 ஆம் திகதி முதல் 2024 நவம்பர் 30 வரையாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் செயற்திட்டத்தின் வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை. 2024 யூலை 30 ஆந் திகதி வரையில் பெறப்பட்ட நிதி உதவிகளின் பெறுமதி ரூபா 7,483,594 தொகை உரிய நோக்கங்களுக்காக செலவிடப்படவில்லை. | இந்த செயற்திட்டம் ஆழமான கடற்பகுதியில் நிதியம் மற்றும் தொல்பொருளியல் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் சிலரினை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்படுகின்றது. ஆழமான கடலினுள் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டமாக இருந்தமையால் கடலில் காணப்படுகின்ற நிலைமையின் பிரகாரம் அதன் நடவடிக்கைகள் கால திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளுதல் கஸ்டமாகும். (கடல் கொந்தளிப்பு மற்றும் தெளிவின்மை) மேலும் அதற்காக தேவையான கணிசமான பெறுமதி உடைய பல்வேறு மூலதன பொருட்கள் கொள்வனவு செய்தல் பெறுகை செயற்பாடுகள் பின்பற்றி மேற்கொள்ளும் போது மாதிரிகளுக்கு பொருந்தாத பொருட்களுக்காக கேள்வி வழங்கப்படாமையினால் மீண்டும் கூறுவிலை கோர வேண்டி ஏற்பட்டிருந்தது. அவ்வாறு இரண்டாவது தடவை கூறுவிலைகள் மேற்கொண்டு பெற்றுக் கொள்வதற்காக பெறுகைத் தீர்மானம் எடுத்தலும் இந்த விசேட பொருட்கள் மற்றும் மூலப் பொருட்கள் வழங்குனரால் இறக்குமதி | மானியங்களை செயற்திறனாக மற்றும் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் பணிகளை திட்டமிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்து வழங்க வேண்டியிருந்தமையால் பொருட்கள் வழங்குவதற்கான காலதாமதமும் ஏற்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | சீகிரிய வெளிநாட்டு வாகனத் தரிப்பிடத்திற்கு அருகில் மொரகஹமுல பிரதேசத்தில் வியாபார கடை மற்றும் கடைகள் அமைக்கப்பட்ட விற்பனைக் கடைகளை உள்ளடக்கிய 37 அறைகளுக்காக வாடகைக்கு வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டு முதல் 2024 யூலை மாதம் 30 ஆந் திகதி வரை மேலும் நிதியத்திற்கு அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 2,584,000 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | மிகுதி நிலுவைத் தவணைப் பணமும் கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் கால தாமதம் இன்றி வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | நலிவான பாறைகளை கொண்டு பூர்த்தி செய்யப்பட்ட புத்தர் சிலை வெயில் மழைக்கு உட்பட்டமையால் பௌதீக மற்றும் இரசாயன ரீதியில் பாதிப்புக்கு உட்பட்ட நலிவான நிலைமையில் காணப்பட்டதனால் திருத்தி வடிவமைப்பதற்காக முன்னுரிமை செலுத்துமாறு காண்பித்து கலாசார அமைச்சினால் மத்திய கலாசார நிதியத்திற்கு வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் தொல்பொருளியல் திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தின் பின்னர் 2019 நவம்பர் 04 ஆந் திகதி புத்தர் சிலையை அமைப்பதற்காக நிர்மாண ஒப்பந்தம் பெறுகை நடைமுறைகளின் பின்னர் ரூபா 1,941,433 பெறுமதியில் 150 நாட்களில் பூர்த்தி செய்வதற்கு நிர்மாண நிறுவனத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 ஒக்டோபர் 06 வரையிலும் ரூபா 874,019 பெறுமதியான பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் | வேலைத் திட்டத்தின் பிரகாரம் நிர்வாக சபை அங்கீகரித்துள்ளது. ஒப்பந்தகாரரால் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் இதற்குரிய எழுத்து மூல உடன்படிக்கை முன்னாள் இருந்த பணிப்பாளர் நாயகம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை . அதன் பிரகாரம் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. உடன்படிக்கை கைச்சாத்திடாமை மற்றும் கொரோனா தொற்று நோயினால் மத்திய கலாசார நிதியத்தில் ஏற்பட்ட நிதி நெருக்கடியின் காரணமாக இந்த ஒப்பந்தத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்தல் நிறுத்தப்பட்டிருந்தது.<br><br>மேற்கூறப்பட்ட ஒப்பந்தகாரருடன் கலந்துரையாடல் ஒன்று எதிர்காலத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அந்த பலவீனமான பாறைகளால் பூர்த்தி செய்யப்பட்டிருந்த புத்தர் சிலையின் பாதகாப்பிற்காக 2025 இன் வேலைத்திட்டத்தில் இந்தப் | சட்டத்தின் பிரகாரம் தொல்பொருளியல் ஞாபகார்த்தங்களைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தத்திற்காக உடன்படிக்கையொன்று சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக செலுத்துவதற்கு முடியாமையின் அடிப்படையில் நிர்மாண நடவடிக்கைகள் முழுமையாக நிறுத்தப்பட்டு 4½ வருடங்கள் கடந்திருந்த போதும் உரிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பணிகளில் உள்ளடக்கி இந்த சிலையை நிர்மாணித்தலின் மிகுதி நடவடிக்கைகளை விரிவாக மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | |
| (ஒ) | சிசு தஹம் செவன மூன்றாவது கட்டத்தின் தொகுதி A இன் கீழ் 16 அறநெறிப் பாடசாலைக் கட்டிடங்கள் தொகுதி B இன் கீழ் 06 அறநெறிப் பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் தொகுதி C இன் கீழ் 04 அறநெறிப் பாடசாலைகள் ஆக 26 அறநெறிப் பாடசாலைகளை நிர்மாணிப்பதற்காக 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதி வேலைகள் பூர்த்தி செய்யும் அடிப்படையில் இலங்கையின் பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் நிதியத்திற்கு இடையே திகதி மற்றும் பெறுமதி இன்றி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் 2024 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அந்தக் கட்டிடத்தின் நிர்மாணங்களில் பௌதீக செயல் முன்னேற்றம் 65 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன் இந்த பணிகளுக்காக நிதியத்தால் கூட்டுத்தாபனத்திற்கு முற்பணமாக ரூபா 33,600,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | சிசு தஹம் செவன நாடு தழுவிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூன்றாவது கட்டத்திற்குரிய அறநெறிப் பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணித்தல் தொடர்பாகவும், மிகுதிக் கொடுப்பனவுகள் தொடர்பாகவும் குழு ஒன்று ஸ்தாபித்து அரச நிறுவனங்களுடன் கலந்துரையாடி கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக நிர்வாக சபை பத்திரம் ஒன்று சமர்ப்பித்து நிர்வாக சபையினால் வழங்கப்படுகின்ற தீர்மானத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியதருகின்றோம். | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| (ஓ) | சிசு தஹம் செவன மூன்றாவது கட்டத்தில் தொகுதி A இன் கீழ் 28 அறநெறிப் பாடசாலைக் கட்டங்கள், தொகுதி B இன் கீழ் 32 அறநெறிப் பாடசாலைக் கட்டங்கள் மற்றும் தொகுதி C இன் கீழ் 28 அறநெறிப் பாடசாலைக் கட்டங்கள் ஆக 88 அறநெறிப் பாடசாலைக் | சிசு தஹம் செவன நாடு முழுவதுமான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூன்றாவது கட்டத்திற்குரிய அறநெறிப் பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணித்தல் தொடர்பாகவும், மிகுதிக் கொடுப்பனவுகள் தொடர்பாகவும் குழு ஒன்று ஸ்தாபித்து அரச | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டங்களை நிர்மானிப்பதற்காக 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யும் அடிப்படையில் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் மற்றும் நிதியத்திற்கு இடையே திகதி மற்றும் பெறுமதி இன்றி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் 2024 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அதில் 20 அறநெறிப் பாடசாலைப் கட்டங்கள் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த 68 அறநெறிப் பாடசாலைக் கட்டடங்களில் பௌதீக செயல் முன்னேற்றம் 10 இற்கும் 23 சதவீதத்திற்கும் இடையிலாக இருந்தது. எனினும் இந்த அறநெறிப் பாடசாலைக் கட்டங்களை நிர்மாணிப்பதற்காக முற்பணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 21,800,000 நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் வேலை பூர்த்தி செய்து கொள்வதற்கு அதிகாரத் தரப்பினர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனங்களுடன் கலந்துரையாடி கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக நிர்வாக சபை பத்திரம் ஒன்று சமர்ப்பித்து நிர்வாக சபையினால் வழங்கப்படுகின்ற தீர்மானத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியதருகின்றோம். | |
| (ஔ) | நிதியத்தில் ரூபா 100,000,000 தொகை முதலீடு செய்வதற்கு உரிய கொள்ளுப்பிட்டி இலங்கை வங்கிப் பிரதான முகாமையாளரால் அனுப்பட்ட இலக்கம் PBU143 ஆம் இலக்கம் 2023 திசெம்பர் 13 ஆந் திகதிய கடிதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வட்டி விகிதம் நிதியத்தின் உத்தியோகத்தர் ஒருவரினால் மாற்றப்பட்டிருந்தது. முதலீட்டுகளைத் தீர்மானிப்பதற்காக அரச வங்கியின் கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி பிழையாக வட்டி விகிதம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் இது தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு பொறுப்பு | இந்த ஐயவினாவில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த விடயங்களுக்காக உள்ளகக் கணக்காய்வாளரால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்வதற்காக அமைச்சிற்கு அனுப்பட்டுள்ளது. | விசாரணைகளை விரைவாக பூர்த்தி செய்து பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்ற நிலையங்களில் நுழைதல் மற்றும் பார்வையிடுவதற்காக நிதியத்தின் மூலம் விநியோகிக்கப்படுகின்ற நுழைவுச் சீட்டுக்களை அச்சிடுதல் மற்றும் அச்சிடப்பட்ட நுழைவுச் சீட்டு இருப்புக்களை மத்திய கலாசார நிதியத்திற்குரிய அத்தப்பத்து கட்டிடத்தில் பேணிச் செல்லப்பட்டிருந்தது. இதற்காக 74 வகையான நுழைவுச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன் இந்த அச்சிடப்படுகின்ற நுழைவுச் சீட்டு இருப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காக பதிவேடு ஒன்று மற்றும் நுழைவுச் சீட்டு இருப்பு விநியோகித்தல் பதிவேடு ஒன்றும் ஆக இருப்பு பதிவேடு இரண்டு பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் 74 வகையான நுழைவுச் சீட்டுக்களுக்குரிய அச்சிடப்பட்ட நுழைவுச் சீட்டுக்கள் பெறப்பட்டமை மற்றும் விநியோகிப்பதற்காக உரிய விபரங்களை உள்ளடக்கி தனிப்பட்ட ரீதியில் பராமரிக்கப்படுகின்ற இருப்புப் பத்திரம் (Bin Card) உடன் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று பேணிச் செல்லப்படாமையின் காரணமாக நுழைவுச் சீட்டு இருப்பு மீதிகளின் சரியான தன்மைகளை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் இருந்தது. | இந்தக் கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கணக்காய்வு உத்தியோகத்தர்களால் உரிய இடத்தில் பரீட்சித்து பரீட்சித்த தினமே தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அச்சிடப்பட்ட நுழைவுச் சீட்டு இருப்புக்களின் பெறுவனவு மற்றும் விநியோகித்தல் தொடர்பான தகவல்கள் ஒரே பதிவேட்டில் குறிப்பிடப்பட்டு பேணிச் செல்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | இருப்பை பேணிச் செல்வதற்காக முறையான இருப்புப் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) மக்கள் வங்கியினால் எதிர்வரும் 05 வருடங்களுக்காக மத்திய கலாசார நிதியத்தின் பிரதான செயற்திட்டமான சீகிரிய, பொலன்நறுவை, அநுராதபுரம் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய சகல | | |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களினதும் ஒன்றிணைந்து அமுல்படுத்தக்கூடிய உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளுக்கு இலத்திரணியல் நுழைவுச் சீட்டை விநியோகிக்கும் புதிய முறைமை ஒன்றுக்காக முன்மொழிவு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த முன்மொழிவிற்காக 2022 ஏப்ரல் 28 ஆம் திகதி நிர்வாக சபை பத்திர இலக்கம் 215.05.09 இன் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | அமைச்சரவை அங்கீகாரம் இன்றி 2022 செப்தெம்பர் 16 ஆந் திகதி இரு தரப்பினருக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடப்பட்டதுடன் உடன்படிக்கையின் 2.6 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தால் மக்கள் வங்கியில் வெளிநாட்டு வருமான நிதி காசுக் கணக்கு ஒன்று (அமெரிக்க டொலர்) மற்றும் உள்நாட்டுக் கணக்கு ஒன்று (ரூபா) பேணிச் செல்வதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது. எனினும் 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய சட்டத்தின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியக் கணக்குகள் இலங்கை வங்கியில் மாத்திரம் பேணிச் செல்ல வேண்டியிருந்ததாக குறிப்பிடப்பட்டிருக்கும் போது சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளாமல் மக்கள் வங்கியில் வெளிநாட்டு நாணயக் கணக்கு ஒன்று பேணிச் செல்வதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை ஊடாக இணக்கம் காணப்பட்டிருந்தது. | இந்தக் கணக்காய்வு ஐயவினாவில் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் யாவும் சரியானது என ஏற்றுக் கொள்கின்றோம். உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளுக்காக நுழைவுச்சீட்டு கருமபீடம் ஒன்றின் ஊடாக மாத்திரம் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்ற நுழைவுச் சீட்டுகளுக்குப் பதிலாக 2017 ஆம் ஆண்டின் போது ICTA நிறுவனம் மூலம் சகல செயற்திட்டங்களுக்காகவும் Online முறை ஊடாக இலத்திரணியல் நுழைவுச் சீட்டு விநியோகிக்கும் செயற்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 27 மில்லியனாக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>சுற்றுலா பிரயாணிகளுக்காக செயற்திறனான மற்றும் தரமான சேவையினை வழங்குவதற்காக நவீன தொழில்நுட்பத்தையுடைய சகல செற்திட்டங்களுக்காகவும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளுக்காக | சட்டத்தின் பிரகாரம் மற்றும் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடல் 07 மாதங்களுக்கு பின்னர் | | அமைச்சரவை குறிப்பிற்கு சரியான தகவல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | அதாவது 2023 ஏப்ரல் 27 அந் திகதி மேற்கூறப்பட்ட முன்மொழிவு தொடர்பான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை குறிப்பு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2023 மே 30 ஆந் திகதி அமப/23/0884/620/026 என்ற அமைச்சரவை தீர்மானம் மூலம் அதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | சுகுரு டிக்கட் பத்திரங்கள் (Smart Tickets) விநியோகிப்பதற்கு இயலுமான புதிய முறைமை ஒன்று அத்தியவசியமாக இருந்தது. | சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (iii) | அவ்வாறே புரிந்துணர்வு உடன்படிக்கையின் 2.9 ஆம் பிரிவின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று நிதிக் கணக்கில் அமெரிக்க டொலர் 100,000 அல்லது கடந்த ஆண்டில் மொத்த வைப்புக்களில் 10 சதவீதம் என்ற பெறுமதியில் கூடிய பெறுமதி ஒன்றை பேணிச் செல்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதுடன் அவ்வாறான தொகை ஒன்றை நிரந்தரமாக கணக்கில் பேணிச் செல்வதன் மூலம் மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் வரையறுக்கப்படக்கூடியதாக இருந்தமையால் மற்றும் அதற்குரிய வட்டித் தொகை இழக்கப்படுதல் போன்ற இணக்கப்பாட்டிற்கு வருகை தரல் கணக்காய்வின் போது பிரச்சனைக்குரியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அதற்காக மக்கள் வங்கியில் முழுமையான பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கு இணக்கம் தெரிவித்து சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் எதிர்வரும் ஐந்து வருட காலத்திற்காக மத்திய கலாசார நிதியத்தின் சகல செயற்திட்டங்களையும் ஒன்றிணைத்து அமுல்படுத்தக் கூடிய இலத்திரணியல் நுழைவுச் சீட்டு விநியோகிக்கும் முறைமை ஒன்றை ஸ்தாபிப்பதற்காக அமைச்சரவை குறிப்பின் கீழ் (23/0884/620/026) கீழ் அமைச்சரவை அங்கீகாரம் சமர்ப்பித்து குறிப்பில் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கவனத்தில் கொண்டு 2023.05.22 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. | உடன்படிக்கைகளுக்கு இணங்கும் போது நிதியத்திற்கு நலன் வாய்ந்த வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | புரிந்துணர்வு உடன்படிக்கையின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் அங்கீகாரம் கிடைத்து 03 மாதங்களில் இலத்திரணியல் நுழைவுச் சீட்டு விநியோகிக்கும் முறைமை ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் இந்த முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. எனினும் மக்கள் வங்கிக்கு உரிய இலத்திரனியல் அட்டை | மக்கள் வங்கியுடன் ஆரம்ப புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலம் இணக்கப்பாட்டிற்கு வருகை தந்து புதிய E-Ticketing முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக மேலும் நிர்வாக சபையுடன் கலந்துரையாடி அந்த தீர்மாகனத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | உடன்படிக்கைகளுக்கு இணங்கும் போது நிதியத்திற்கு நலன் வாய்ந்த வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊடாக கட்டணம் அறவிடும் இயந்திரம் (POS Machine) சகல நிலையங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் இலத்திரனியல் அட்டை ஊடாக உழைக்கப்படுகின்ற வருமானங்களில் ரூபா 21,978,335 தரகு பணம் ஆக மக்கள் வங்கி அறவிட்டிருந்தது. | | |
| (இ) | 2022 ஆம் ஆண்டிற்காக தனியார் எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் 02 இல் இருந்து நிதியத்தால் எரிபொருள் பெறப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | நிதியத்தின் வாகனங்களுக்காக எரிபொருள் பெற்றுக் கொள்ளும் போது முறையான எரிபொருள் கட்டளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் நிதியத்தில் கட்டளையாகப் பயன்படுத்தி வாகனங்களுக்காக எரிபொருள் பெறப்பட்டிருந்தது. | இதனை சரி செய்வதற்காக அரசாங்கத்தின் அச்சகத்தில் இருந்து அச்சிடப்பட்ட பொதுப்படிவம் பயன்படுத்தி வாகனங்களுக்காக எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்தின் எரிபொருள் கட்டளை பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ii) | வாகனப் பொறுப்பு உத்தியோகத்தரின் பரிந்துரை மற்றும் பணிப்பாளர் (நிர்வாகம்) / நிர்வாக உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் எரிபொருள் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களின் பரிந்துரை மற்றும் அங்கீகாரம் இன்றி 16 வாகனங்களுக்காக ரூபா 4,371,918 பெறுமதியான எரிபொருள் பெறப்பட்டிருந்தது. | அவசர தேவையின் அடிப்படையில் உரிய உத்தியோகத்தர்கள் இல்லாத சந்தர்ப்பங்களின் போது இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தற்போது சரியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த பட்டியலின் பொழிப்பில் குறிப்பிடப்பட்ட கட்டளை இலக்கங்களுக்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் விண்ணப்ப பத்திரம் | நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற கடமைகளின் போது இவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. தற்போது இவ்வாறான | அரசாங்கத்தின் எரிபொருள் கட்டளைப் பதிவேடு பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கோவையில் இல்லாமையால் வாகனங்களுக்காக எரிபொருள் பெற்றுக் கொள்ளல் உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பாக கணக்காய்வில் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சான்றுகள் காணப்படவில்லை. | சந்தர்ப்பங்களைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புத்தசாசன கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு சமர்ப்பித்த இலக்கம் MBCRA/CA/CP/2020-17 ஆம் இலக்க 2020 யூன் 17 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பின் மூலம் கொரோனா வைரஸ் பரவி உலகலாவிய ரீதியில் பரவியதன் காரணமாக சுற்றுலா கைத்தொழில் முழுமையாக வீழ்ச்சியடைந்ததன் காரணமாக 2020 மார்ச் 17 ஆந் திகதி முதல் நிதியத்தின் நுழைவு சீட்டுக்கள் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளமையினால், ஊழியர் சம்பளம் செலுத்துவதற்காக மாதம் ஒன்றிற்கு செலவாகின் ரூபா 110 மில்லியன் அளவிலான தொகை ஏனைய அத்தியாவசிய பராமரிப்பு செலவினமான நீர், மின்சாரம், தொலைபேசி, எரிபொருள் போன்றவற்றிற்காக மாதம் ஒன்றிற்கு ரூபா 25 மில்லியனை உள்ளடக்கி ரூபா 135 மில்லியன் தொகை மத்திய கலாசார நிதியத்திற்கு மாதம் தோறும் சுற்றுலாக் கைத்தொழிலை நல்ல நிலைக்கு கொண்டு வரும் வரை பொதுத் திறைசேரி ஊடாக வழங்குவதற்கு அங்கீகாரம் கோரப்பட்டதுடன் அதற்காக 2020 யூலை 03 ஆந் திகதி அமைச்சரவை மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்துக்கு உரிய குறித்துரைத்த தேவைகள் அல்லாத மிகை நிதியம் முதலீடு செய்யப்பட்டு நிலையான வைப்பில் ரூபா 5,342 மில்லியன் காணப்பட்ட போது 2020 ஆம் ஆண்டின் ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது ரூபா 405 மில்லியன் மற்றும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்பு ரூபா 5,040 மில்லியன் ஆகக் காணப்பட்ட போது 2021 ஆம் ஆண்டில் ரூபா 327.2 மில்லியன் ஆக | 2018/2019 ஆம் ஆண்டுகளின் போது கணிசமான செலவினங்கள் செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் 2020/2021 ஆம் ஆண்டுகளின் போது நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நோயின் நிலைமையின் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாதாரிகளின் வருகை வரையறுக்கப்பட்டமையால் வீழ்ச்சியடைந்ததால் வருமானம் கிடைக்காமையின் காரணமாக அத்தியாவசிய மீண்டெழும் செலவினம் மற்றும் ஏனைய தேவைகளுக்கான செலவினங்களைத் தீர்க்கும் வகையில் இவ்வாறு திறைசேரியில் இருந்து நிதி பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதியத்தின் அத்தியாவசிய பராமரிப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கிய மீண்டெழும் செலவினங்களைத் தீர்த்து வைப்பதற்கு எந்த ஒரு தொகையும் நிதியத்திற்கு கிடைக்காதிருந்ததாக அமைச்சரவைக் குறிப்பில் காண்பிக்கப்பட்ட போதிலும் நிலையான வைப்பாக ரூபா 5,000 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை ஒன்று காணப்பட்டமையால் மற்றும் அதன் வட்டி உழைக்கப்படுகின்றமையால் அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பை சமர்ப்பிக்கும் போது சரியான தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கூட்டுமொத்தமாக ரூபா 732.5 மில்லியன் அவ்வப்போது திறைசேரியில் இருந்து பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதியத்தின் நடவடிக்கைகளுக்காக நிதி காணப்பட்ட போதும் திறைசேரியில் இருந்து நிதி கோரப்பட்டமை கோருவதற்கான நடவடிக்கைகள் எடுத்தமை கணக்காய்வின் போது பிரச்சனைக்கு உரியதாக இருந்தது.

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ‘‘பிபிதெமு பொலன்னறுவை’’ செயற்திட்டத்திற்கு இணையாக மரபுரிமை நகரமாக பொலன்நறுவை புண்ணிய நகரம் சார்ந்த வலயத்தை அபிவிருத்தி செய்யும் முன்மொழிவின் பிரகாரம் மத்திய கலாசார நிதியத்தின் பொலன்நறுவை செயற்திட்ட அலுவலகம் பேணிச் செல்லப்படுகின்ற கட்டடத்துடனான காணி மரபுரிமை முகாமைத்துவ நிலையம் ஒன்று, தொல்பொருளியல் தகவல் நிலையம் மற்றும் பாரம்பரிய உற்பத்தி விற்பனை சாலை ஒன்றாக அபிவிருத்தி செய்வதற்கு உரிய உயர்கல்வி அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2018 மே 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பு இலக்கம் அமப/18/1132/824/007 என்ற 2018 யூன் 13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது. | | |
| (i) முறையான காணி கையேற்கப்படாமல் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பிபிதெமு பொலன்நறுவை நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக நிதியத்தின் பொலன்னறுவை செயற்திட்ட அலுவலக வளவில் தொல்பொருளியல் தகவல் நிலையம் மற்றும் சம்பிரதாய விற்பனை கடை | பிபிதெமு பொலன்நறுவை மரபுரிமை முகாமைத்துவ நிலையம் நிர்மாணிக்கும் கேள்வி நடைமுறைகளுக்கு புறம்பாக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (CECB) மற்றும் | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிப்பதற்காக ரூபா 39,374,087 மற்றும் 10 சதவீத நிச்சயமற்ற செலவினங்களை உள்ளடக்கிய கட்டணத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மத்திய பொறியியல் சேவை தனியார் கம்பனிக்கு கையளிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் 3 சதவீத கட்டணம் செலுத்துவதன் கீழ் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தை ஆலோசனையாளராக நியமிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது நிதியத்தால் மத்திய பொறியியல் உசாத்துணை பணியத்துடன் 2019 மார்ச் 20 ஆந் திகதி 06 மாதங்களில் வேலைகள் பூர்த்தி செய்து கையளிப்பதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அதற்காக ரூபா 15,864,480 செலுத்தி 54 மாதங்கள் கடந்திருந்த போதும் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்படாது இருந்ததுடன் 2018 செப்தெம்பர் 07 ஆந் திகதி வேலை ஆரம்பித்தல் முற்பணமாக ரூபா 7,785,380 தொகை ஒன்று உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு 06 மாதங்களுக்கு முன் செலுத்தப்பட்டிருந்தது. | வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி (CESL) இற்கு அமப/08/0173/344/002 மற்றும் 2008.02.06 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் (இணைப்பு – 24) அமைச்சரவைக் குறிப்பு இலக்கம் HECA/CA/2018/01 இன் பிரகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | இதன் பின்புலத்தில் ஒப்பந்தம் அந்த அளவில் பூர்த்தி செய்து பட்டியல்கள் செலுத்தி மிகுதி வேலை அளவு நிறுவனத்தின் ஊழியர்களை ஈடுபடுத்தி பூர்த்தி செய்வதற்கு பணிப்பாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் முற்பணத் தொகை மற்றும் இடைக்கால பட்டியல் 02 ஊடாக இதுவரை ரூபா 15,864,480 செலுத்தப்பட்டிருந்ததுடன் 2024 மே 02 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட இடைக்கால பட்டியல் இலக்கம் 04 இன் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட மொத்த வேலைப் பெறுமதி ரூபா 13,954,221 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட வேலைப் பெறுமதியை விஞ்சி ரூபா 1,910,259 | முற்பணத் தொகையாக ரூபா 7,785,380.50 செலுத்தப்பட்டுள்ளது. 03 பட்டியல்களின் முற்பணத் தொகையில் ரூபா 6,825,065.96 குறைக்கப்பட்டுள்ளது.<br><br>மிகுதியாக உள்ள முற்பணத் தொகையைக் குறைத்து பட்டியல்களுக்காக கொடுப்பனவு செய்யப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம்.<br><br>மிகுதி நிர்மாணப் பணிகள் 2025 இன் வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு பூர்த்தி செய்வதற்கு | உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதியை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேலதிக தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தீர்மானிக்கப்பட்டுள்ளது என தயவுடன் அறியத் தருகின்றோம். | |
| (ஆ) பொகுணுவிட்ட கிட்சிறிமெவன் ரஜமஹா விகாரை ஆவாசகெய பாதுகாப்பதற்காக பெறுகை நடைமுறைகளின் பிரகாரம் ரூபா 15,751,350 தொகை தனியார் நிர்மாண நிறுவனத்திற்கு 2019 சனவரி 17 ஆந் திகதி நிர்மாண ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதுடன் உரிய நிறுவனத்தால் குறித்துரைத்த காலத்தில் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படுவதாக கோவையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்த நிறுவனத்தால் ஒப்பந்தத்திற்கு உரியதாக பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்காக ரூபா 13,167,405 ஆலோசனைக் கம்பனியால் உறுதிப்படுத்தப்பட்ட 03 பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்தக் காலத்தில் ரூபா 1,000,000 தொகை மாத்திரம் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இந்த கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் சரியானதாகும். இந்த ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையால் உரிய பட்டியல்களை செலுத்துவதற்கு பரீட்சித்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தத்திற்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 01/2020 இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877 (உ) பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலம் 2015 ஆம் ஆண்டின் பின்னர் நிதியத்தின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2016 இன் வருடாந்த அறிக்கை அச்சிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் விரைவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த அறிக்கை சபையில் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்திற்காக சிரேஸ்ட நிலையில் 17 பதவிகள், மூன்றாம் நிலையில் 46 பதவிகள், இரண்டாம் நிலையில் 478 பதவிகள், ஆரம்ப நிலையில் 2468 ஆக 3009 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். எனினும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஸ்ட நிலையில் உள்ள 17 | • நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட BD/CBP/01/01/02-2021 மற்றும் 2021.12.31 ஆந் திகதிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஆட்சேர்த்தல் நடைமுறையின் பிரகாரம் ஆட்சேர்த்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

பதவிகளில் 15 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சிரேஸ்ட நிறைவேற்று மட்டத்தில் 07 பதவிகளுக்காகவும் ஒப்பந்த மற்றும் இரண்டாம் நிலை மற்றும் பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த நிலைமையில் நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் நீண்ட கால திட்டத்தில் உள்ள நிதியத்தின் செயற்பாடுகளுக்கு பாதகம் ஏற்படவில்லை என்ற அபிப்பிரயம் கணக்காய்வின் போது புறந்தள்ள முடியாதிருந்தது.

03/2021 மூலம் அரச செலவின முகாமைத்துவத்தின் கீழ் அரச சேவையின் ஆட்சேர்ப்புக்கள் கைவிடப்பட்டிருந்தது.

- அரச சேவையில் ஆட்சேர்ப்பு தொடர்பாக பிரதமரின் செயலாளரின் தலைமையில் உடைய குழுவினால் 2023.10.27 ஆந் திகதி 07 பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்த்தலை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் அவ்வப்போது பல்வேறு பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2024 இன் சனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் காரணமாக இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தேர்தல் கால எல்லையின் பின்னர் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.